# நெல்லையில் எல்லையில்லா உற்சாகத்துடன் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரைகேட்க கண்ணுக்கெட்டிய தூரம் வரை திரண்டிருந்த மக்கள்!



## தலைவர் கலைஞர் பற்றிப் பேச எடப்பாடி பழனிசாமிக்கு யோக்கியதை கிடையாது!

# தமிழ்நாடு தலைநிமிர மலையளவு சாதனைகள் செய்துள்ளோம்!



## நெல்லையில் எல்லையில்லா உற்சாகத்துடன் கூடிய மக்கள் கூட்டத்தில்

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உணர்ச்சிமிகு விளக்கவுரை!

நெல்லை, ஏப். 5 –

**சிங்கம் போன்று வாழ்ந்த தலைவர் கலைஞர் பற்றிப் பேச எடப்பாடி பழனிசாமிக்கு தகுதியும் இல்லை; யோக்கியதையும் கிடையாது என்றும்; தமிழ்நாடு தலைநிமிர மலையளவு சாதனைகள் செய்துள்ளோம் என்றும் நெல்லையில் எல்லையில்லா உற்சாகத்துடன் திரண்டிருந்த மக்களிடையே மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து உரையாற்றுகையில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

**பாளையங்கோட்டை எப்போதுமே தி.மு.க. கோட்டை. எங்கள் தலைவரைப் பற்றிப் பேச பழனிசாமிக்கு எந்த யோக்கியதையும் கிடையாது. அடித்துச் சொல்கிறேன், உங்களால் எந்தக் காலத்திலும் ஆட்சியைப் பிடிக்கவே முடியாது என்றும் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.**

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.4.2026) மாலை, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து ஆற்றிய உரை வருமாறு: –**

எப்படிப்பட்ட நெல்லைச் சீமைக்கு நான் இன்றைக்கு வந்திருக்கிறேன் என்றால், இந்திய விடுதலைப் போராட்டத்தில் தனி முத்திரையையும், தமிழ்நாட்டின் வரலாற்றில் மாபெரும் வீரத்தையும், தமிழ் காக்கும் போராட்டத்தில் தலைவர் கலைஞர் அஞ்சாமல் தனிமைச் சிறையில் இருந்த தியாகத்தையும் பெற்றிருக்கும் பாளையங்கோட்டை இருக்கும் நெல்லைச் சீமைக்கு நான் வந்திருக்கிறேன்.

அடிமை அ.தி.மு.க–வின் முதுகில் ஏறி, மதவாத பா.ஜ.க. நிகழ்த்தும் அரசியல் பண்பாட்டுப் படையெடுப்பிலிருந்து தமிழ்நாட்டைக் காக்க உங்கள் ஆதரவைக் கேட்டு நான் வந்திருக்கிறேன்.

தமிழ்நாட்டைக் காக்க நான் ரெடி? நீங்கள் ரெடியா? திராவிட மாடல் 2.0 ஆட்சிக்கு நான் ரெடி? நீங்கள் ரெடியா?

அதற்கு, இந்த மேடையில் இருக்கும் எல்லா வேட்பாளர்களும் வெற்றி பெற வேண்டும்! வெற்றி பெற வைப்பீர்களா?

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வீர்!

முதலில், இராதாபுரம் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் அப்பாவு அவர்கள். மிக உயர்ந்த மனிதர். பார்ப்பதற்கு மட்டும் உயரமல்ல, தமிழ்நாட்டு சட்டமன்றத்தை நடத்தியும் உயர்ந்தவர். அவர் ஆசிரியராக இருந்த காரணத்தால், மாணவர்களை எப்படி வழிநடத்தினாரோ, அப்படி நம்முடைய திராவிட மாடல் அரசில், சட்டமன்றத்தையும் திறமையாக வழிநடத்தியவர். நான்கு முறை உங்களின் எம்.எல்.ஏ.வாக இருந்து, ராதாபுரம் தொகுதி மக்கள் அவரைப் பாராட்டிப் போற்றி, இன்றைக்கு அவர் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கிறார். அவருக்கு, ராதாபுரம் தொகுதியில் இருக்கும் உதயசூரியன் சின்னத்தில் உங்களின் பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி, வெற்றி வேட்பாளர் மாவட்டச் செயலாளர் அப்துல் வகாப் அவர்கள். பாளையங்கோட்டை எப்போதுமே தி.மு.க. கோட்டை. கடந்த முறை போன்றே, இந்த முறையும் உங்களுக்கு பணியாற்றி ஆதரவு கோரி நிற்கிறார். அப்துல் வகாப் அவர்களுக்கு, உதயசூரியன் சின்னத்தில் உங்களின் பொன்னான வாக்குகளை மீண்டும் வழங்க வேண்டும்.

அடுத்து, திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி. நமது வெற்றி வேட்பாளர் மாநகரச் செயலாளர் தம்பி சுப்பிரமணியன் அவர்கள். அமைதியாக தன்னுடைய பணியைச் சிறப்பாகச் செய்யக்கூடிய ஓர் இளைஞர். திருநெல்வேலி தொகுதி மக்கள் சுப்பிரமணியன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் உங்களின் பொன்னான வாக்குகளை வழங்கி அவரை வெற்றி பெற வைக்க வேண்டும்.

அடுத்து, நாங்குநேரி சட்டமன்றத் தொகுதி. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வெற்றி வேட்பாளர் பெருமதிப்பிற்குரிய அருமைச் சகோதரர் ராகுல் காந்தி மீண்டும் நம்மிடத்தில் ஒப்படைத்திருக்கும் வெற்றி வேட்பாளர் ரூபி மனோகரன் அவர்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார். ஏற்கெனவே நாங்குநேரி மக்களுக்கு நன்கு அறிமுகமாகி, இரண்டு முறை உங்களுக்காகப் பணியாற்றியவர். அவருக்குக் கை சின்னத்தில் சிறப்பான வெற்றியைத் தேடித் தர வேண்டும்.

அடுத்து, அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வெற்றி வேட்பாளர் V.P. துரை அவர்கள். அவரும் ராகுல் காந்தி அவர்களால் அடையாளம் காணப்பட்டு இன்றைக்கு வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கிறார். வழக்கறிஞரான இவர், தனது தந்தை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வேல்துரை போன்று மக்களுக்குப் பணியாற்ற ஆதரவு கேட்டு நிற்கிறார். அவருக்கும் கை சின்னத்தில் நீங்கள் ஆதரவு தந்து பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் இந்த 5 பேருக்கும் நீங்கள் சிறப்பான ஆதரவைத் தந்து, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வெற்றியைத் தேடித் தர வேண்டும். வெற்றி உறுதியா? (உறுதி). வெற்றி உறுதியாகிவிட்டது வேட்பாளர்கள் இப்போது உட்காரலாம்.

### அ.தி.மு.க. ஆட்சியில் படுபாதாளத்தில் தமிழ்நாடு!

பத்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில், தமிழ்நாட்டின் நிர்வாகம் சீரழிந்து, வளர்ச்சி முடக்கப்பட்டு, நம்முடைய மாநிலமே படுபாதாளத்திற்குத் தள்ளப்பட்டதை நீங்கள் எல்லாம் நன்கு அறிவீர்கள், மறந்திருக்க மாட்டீர்கள்! அதுவும், அ.தி.மு.க.வின் கடைசி நான்காண்டு காலத்தில், நடந்த சிலவற்றை மட்டும் சுருக்கமாக உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அம்மையார் ஜெயலலிதா வாழ்ந்த கோடநாட்டிலேயே கொலை, கொள்ளைகள் – சாத்தான்குளம் காவல் மரணம் – தமிழர்களின் மனதைப் பதற வைத்த நீட் தற்கொலைகள் – இளம்பெண்கள் கதறி அழுத பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை – அமைதியான ஸ்டெர்லைட் போராட்டத்தில் அப்பாவி பொதுமக்கள் மேலேயே துப்பாக்கிச்சூடு – இவை அனைத்திற்கும் மேல், டெல்லிக்கு காவடி தூக்கி, C.A.A., மூன்று வேளாண் சட்டங்கள் போன்ற மக்கள் விரோத சட்டங்களை, சிறுபான்மை விரோதச் சட்டங்களை ஆதரித்தது; நீட்டிய இடத்தில் எல்லாம் கையெழுத்து போட்டது என தமிழ்நாட்டின் நிதி உரிமை, மாநில உரிமை என்று அனைத்தையும் அடகு வைத்த ஃபிளாஷ் பேக்–ஐ நினைத்தாலே, இன்றைக்கு மக்கள் பீதி அடைவார்கள்.

அப்படிப்பட்ட கேவலமான ஆட்சியில் இருந்து, உங்கள் ஆதரவுடன் தமிழ்நாட்டை மீட்டெடுத்து, புதிய விடியலைத் தந்து, கடந்த 5 ஆண்டுகளில், இந்தியாவில் நம்பர் ஒன் மாநிலமாகத் தமிழ்நாட்டை இன்றைக்கு நாம் உயர்த்தியிருக்கிறோம். ஏன், இந்தியாவிற்கே வழிகாட்டும் ஆட்சியாக நடத்திக் கொண்டிருக்கிறோம். நம்முடைய ஆட்சிக்கு என்ன பெயர் வைத்தோம் சொல்லுங்கள்? திராவிட மாடல். நெஞ்சை நிமிர்த்தி சொல்கிறேன்… இந்தியாவே தெற்கைத் திரும்பிப் பார்க்கும் அளவிற்கு, திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டைத் தலைநிமிர வைத்திருக்கிறோம்!

முதல் நாள் – முதல் கையெழுத்திலேயே மகளிர் எல்லோரும் கட்டணமில்லாமல் விடியல் பயணம் செய்யலாம் என்று உத்தரவிட்ட கைதான், இந்த ஸ்டாலின் கை.

அதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டின் அடுத்தகட்ட வளர்ச்சி வரலாற்றை எழுத வேண்டும் என்று தீர்மானித்து, தொடர்ச்சியாகப் பல முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தத் தொடங்கினேன். அதையெல்லாம் பட்டியல் போட்டால், இந்தப் பொதுக் கூட்டத்தையே ஒரு சாதனை விளக்கப் பொதுக் கூட்டமாகத்தான் நடத்த வேண்டும்! அந்தளவிற்கு மலையளவு சாதனைகளை நாம் செய்திருக்கிறோம்!

### நெல்லை மாவட்டத்தில் பல்வேறு முன்னோடித் திட்டங்கள்!

நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், இந்தத் திருநெல்வேலி மாவட்டத்திற்குச் செய்திருக்கும் திட்டங்களை மட்டுமே, ஒரு தனி புத்தகமாக போடலாம்! அதனால், மிக மிக முக்கியமான முத்தாய்ப்பான சாதனைகளை மட்டும் தலைப்புச் செய்திகளாக – ஹைலைட்டாக நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்திய வரலாறு தமிழ் நிலத்திலிருந்துதான் எழுதப்பட வேண்டும் என்ற நம்முடைய முழக்கத்திற்கு அடித்தளமாக நிற்கும், பொருநை அருங்காட்சியகம்!

**திருநெல்வேலி பல்நோக்கு மருத்துவமனையில் இதயம், நரம்பு, சிறுநீரகம், கல்லீரல் குறைபாடு உள்ளவர்களுக்கு சிகிச்சை வழங்க, நவீன கட்டமைப்புகளுடன் கூடிய மருத்துவமனைக் கட்டடம்,**

**பல ஆண்டு கனவுத் திட்டமான, தாமிரபரணி – கருமேனியாறு மற்றும் நம்பியாறு நதிநீர் வெள்ள உபரி நீர்த் திட்டம்,**

**மானூரில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,**

**93 திருக்கோயில்களில் சீரமைப்புப் பணிகள்,**

**ஆயிரம் ஆண்டு பழமையான திருக்கோயில்கள் திருப்பணிகள் திட்டத்தின்கீழ் 33 திருக்கோயில்களில் சீரமைப்புப் பணிகள்,**

**அம்பாசமுத்திரத்தில் புறவழிச்சாலை.**

**இதுபோக நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணிகளைச் சொல்ல வேண்டும் என்றால்,**

**6 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 831 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளும்,**

**களக்காடு நகராட்சி மற்றும் 7 பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளும் முடிவுறும் நிலையில் இருக்கிறது.**

**மணிமுத்தாறு அணைப்பகுதியில், சாகசச் சுற்றுலா வசதிகள், பல்லுயிர்ப் பூங்கா மற்றும் இதர வசதிகளுடன் சுற்றுச்சூழல் சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும் பணிகள் தொடங்கப்பட்டிருக்கிறது.**

**அதேபோன்று, கூட்டப்புளி மற்றும் கூடுதாழை மீனவக் கிராமங்களில் தூண்டில் வளைவு அமைக்கும் பணிகள் நடந்து கொண்டிருக்கிறது!**

**இராதாபுரம் வட்டம், விஜயாபதியில், புதிய விளையாட்டரங்கம்,**

**தாழையூத்து முதல் கொங்கந்தான்பாறை விலக்கு வரை மேற்குப் புறவழிச்சாலை அமைக்கும் பணிகள்,**

**காவல்கிணறு – இராதாபுரம் சாலையில் இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்கும், குலவணிகர்புரம் பகுதியில் Y வடிவ மேம்பாலம் அமைப்பதற்கும் விரைவில் பணிகள் தொடங்கப்பட இருக்கிறது.**

**இராதாபுரம் வட்டம், ஆலந்துரையாற்றின் குறுக்கே அமைந்திருக்கும் கஞ்சிப்பாறை அணைக்கட்டை மேம்படுத்தி, அதன் மேல்மட்ட மற்றும் கீழ்மட்டக் கால்வாய்களை அனுமாநதி வரை அகலப்படுத்தும் பணி,**

அம்பாசமுத்திரம் வட்டம், விக்கிரமசிங்கபுரம் கிராமத்தில், கோரையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கவும், சேரன்மகாதேவி வட்டம், தெற்கு வீரவநல்லூர் கிராமத்தில் வள்ளிமலை ஓடையின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கவும், திசையன்விளை வட்டத்தில் இருக்கும் குட்டம் மற்றும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளுக்கு வெள்ள நீரைத் திருப்பி விடுவதற்காக நம்பியாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

### கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் பெயரில் மாபெரும் நூலகம்!

எல்லாவற்றிற்கும் மேல், பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் பெயரில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மாபெரும் நூலகம் அமைய இருக்கிறது. இப்படி சாதனைகளை சொல்லிக் கொண்டே போகலாம்! இவ்வளவும் செய்திருக்கும் துணிவோடுதான், உங்களிடம் நான் உரிமையுடன் வாக்கு கேட்டு வந்திருக்கிறேன். ஆனாலும், பழனிசாமி அவர்களும் வாக்கு கேட்டு வருகிறார்… எப்படி வருகிறார்? சுயசிந்தனை இல்லாமல் தமிழ்நாட்டை நாசப்படுத்திய அவர்,

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## தலைவர் கலைஞர் ஒரு சிங்கம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஏப். 5 –

நாக்கில் நரம்பின்றிப் பேசும் பண்பற்ற பழனிசாமி அவர்களே; தலைவர் கலைஞர் ஒரு சிங்கம் என்று கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

அவரது பதிவு வருமாமறு:–

**தலைவர் கலைஞர் ஒரு சிங்கம்!**

**தோல்வி பயத்தில், நாக்கில் நரம்பில்லாமல் பேசும் பழனிசாமி இனி எந்நாளும் ஆட்சிக்கு வரமுடியாது!**

**தலைவர் கலைஞர் ஒரு சிங்கம்! அந்தச் சிங்கத்தின் பிள்ளை நான். தந்தையாக மட்டுமல்ல, தலைவராக அவரை எந்நாளும் போற்றி வணங்குபவன்!**

**பண்பற்ற பழனிசாமி அவர்களே,**

**தலைவர் கலைஞரும் நானும் மக்களைச் சந்தித்து முதலமைச்சரானவர்கள். உங்களைப் போல, கூவத்தூர் கும்மாளங்களால், கொல்லைப் புறம் வழியாக முதலமைச்சர் பொறுப்பை**



**ஏலத்துக்கு எடுத்தவர்கள் அல்ல!**

**எங்களைப் பற்றிப் பேசும் தகுதி உங்களுக்கு இல்லை! தமிழ்நாட்டுக்கு மக்கள் என்றுமே அந்தத் தகுதியை உங்களுக்கு வழங்க மாட்டார்கள்!**

**மே 4: மக்களின் Judgement Day–வில் உங்களுக்கான தண்டனை கிடைக்கும்!**

**இவ்வாறு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.**